# அலி இப்னு சீனாவின் மருத்துவத் துறை சார்ந்த பங்களிப்புக்கள் பற்றிய ஓர் மதிப்பாய்வு

A.AsraBanu, A.Aathifa, M.M.RoshanaFarwin, M.M.Shiyana

Department of Islamic Studies, South Eastern University of Srilanka.
aseerasrabanu@gmail.com

**ஆய்வு சுருக்கம்**

இப்னு சீனாவின் மருத்துவப்பணிகள் அவரது காலத்தின் மிக முக்கியமான மருத்துவ சாதனைகனின் உச்சத்தைக் குறிக்கின்றது. பல மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத நோய்களை எல்லாம் குணப்படுத்தி “மருத்துவத்தின் இளவரசன்” எனப்போற்றப்படும் அலி இப்னு சீனா பல நூற்களை எழுதியிருந்தாலும் குறிப்பாக இவரது சில நூற்களையே எம்மால் இன்று அறிய முடியுமாயுள்ளது. அலி இப்னு சீனாஅவர்களின் மருத்துவத் துறைசார்ந்த பங்களிப்பு பற்றிய ஓர் மதிப்பாய்வாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை மீளாய்வுசெய்து விபரிப்பு முலம் முன்வைக்கப்பட்டுள்ளது. மருத்துவதுறையின் தந்தை என அனைவராலும் அறியப்பட்ட இவர் மருத்துவத்தின் பல துறைகளிலும் பிரசித்திபெற்ற முன்னோடி என்பதனை இவ்வாய்வின் முடிவிலேயே எம்மால் அறியக்கூடியதாய் இருந்தது. மேலும் பல்துறைகளில் பிரசித்திபெற்ற இவர் இன்றைய நவீன உலகில் நோய்க்கான காரணங்கள் அதன் அறிமுகம் கட்டுப்பாட்டு முறைகள் என்பவற்றையும் இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு மூலம் நோய்கள் கண்டறியும் நுட்பம் போன்றவற்றை இப்னு சீனா அறிமுகப்படுத்தினாலும் மக்கள் அது பற்றிய தெளிவற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர். எனவே எம் முன்னோடிகளான முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பை இன்றைய உலகம் புரட்டிப் பார்ப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினரை சேவையாளர்களாக மாற்றி அவர்களின் அறிவை தாமும் பின்பற்ற தூண்டுவதாய் இவ் ஆய்வுஅமையும் என நம்புகின்றோம்.

**திறவுச் சொற்கள் :** அலி இப்னுசீனா, மருத்துவம், கிதாபுஷ்ஷிபா, கானூன் பித்திப், மருத்துவப் பங்களிப்பு

## 1. அறிமுகம்

அல் ஹுஸைன் இப்னு அலி இப்னு சீனா என்ற முழுப் பெயரையுடைய இவர் கி. பி. 980ஆம் ஆண்டு அப்ஷானா என்ற கிராமத்தில் பிறந்தார். இந்தக் கிராமம் மத்திய ஆசியாவின் (உஸ்பகிஸ்த்தான்) புகாராவுக்கு அருகே காணப்படுகின்றது (Asimov,1986). இவரது தந்தையைப் பற்றிய தெளிவான செய்தி இல்லை. அலி இப்னு சீனா 2ஆவது மகன் என்ற செய்தி உண்டு (Bag,1986). இவருடைய தாயார் சித்தாரா (star) என்ற பாரசீகப் பெயரை உடையவர் என்றும், இவர் பாரசீகர் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்(Sivalingam,2014). இப்னு சீனாவின் தந்தை நன்கு கல்வி கற்றவராக இருந்தமையால் இவருக்குமார்க்கக்


ISBN 978-624-5736-14-0

கல்வியைக் கற்க வழிவகுத்தார். அலி இப்னு சீனா அவர்கள் துருக்கி, பாரசீக, அரபிவம்சம் எனப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன(gohlman,1974). இப்னு சீனா சிறுவனாக இருக்கும் போதே மற்றைய சிறுவர்களைக் காட்டிலும் வித்தியாசமானவராகத் திகழ்ந்தார். நூஹ் பின் மன்சூருடைய ஆட்சிகாலத்தில் அவருடைய தந்தை அப்பகுதியின் ஆளுநராக இருந்தமையால் தினமும் மாலைப் பொழுதில் பல அறிஞர்கள் கூடுவது வழக்கமாக இருந்ததால் அவரது வீடு ஒரு கல்விச் சூழலாக மாற்றமடைந்திருந்தது. இவர் தனது இளமைப் பருவத்தை அல்குர்ஆனை மனனமிடுவதிலும், மருத்துவத் துறையிலும் ஈடுபடுத்திகொண்டார். இவர் தனது 21ஆம் வயதில் முதல் புத்தகத்தை எழுதத் தொடங்கினார். மன்னன் நூஹ் இப்னு மன்சூர் ஹாமானி என்பவருக்கு ஏற்பட்ட எவராலும் குணப்படுத்த முடியாத நோயை இவர் குணப்படுத்தினார்(Ismail,2012). இவர் இளம் வயதிலேயே பல்வேறு ஆசிரியர்களிடம் அல் ஜிப்ரா, வானசாஸ்திரம், தர்க்கவியல், தத்துவம், இறையியல் எனப் பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொண்டுள்ளார். அலி இப்னு சீனா பல்துறை அறிவு கொண்டவரும், புகழ் பெற்ற மருத்துவரும், மெய்யியலாளரும் ஆவார். இவர் வானியல், வேதியியல், நிலவியல், தர்க்கவியல், தொல்லுயிரியல், கணிதம், இயற்பியல், கவிதை, உளவியல், அறிவியல், போன்ற பல துறைகளிலும் வல்லுனராக இருந்ததுடன் ஒரு போர் வீரராகவும், அரசியலாளராகவும், ஆசிரியராகவும், கவிஞராகவும் இருந்துள்ளார். இவற்றில் இவரது மருத்துவத் துறையையே நாம் ஆய்வுத் தலைப்பாக தெரிவுசெய்துள்ளோம். இஸ்லாத்தின் சிறந்த மருத்துவராகவும், வரலாற்றில் மிகச் சிறந்த சிந்தனையாளராகவும் திகழ்ந்துள்ளார்(Ahadova,1964). 1000 வருடங்களைக் கொண்ட முஸ்லிம்களின் சாதனைமிக்க அந்தப் பொற்காலத்தில் (1000 years of Muslim's golden age) வாழ்ந்த முக்கியமானவர்களில் இவரும் ஒருவர்(Bogolyubov,Gukovich,1983). அலி இப்னு சீனா அவர்களால் கிட்டத்தட்ட 40 மருத்துவ நூல்கள் எழுதப்பட்டுள்ளன(Abdullah-zade,1980). மருத்துவ வரலாற்றில் அவிசென்னாவின் இடம் என்ற ஆய்வில் நவீன மருத்துவம் அவரது மருத்துவத்தின் உள்கட்டமைப்பின் மீது போடப்பட்டுள்து. மருத்துவ வரலாற்றில் அவிசென்னாவின் நிலைப்பாடு மற்றும் மருத்துவக் கல்வித்திட்டங்களின் வளர்ச்சியில் குறிப்பாக அல் கேனனில் அவரது மருத்துவப்பணிகளில் அறிவியல் செல்வாக்கு வரலாற்று அணுகுமுறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது(Jamal moosavi,2009). மேலும் எமது ஆய்வில் இவரது அனைத்து மருத்துவதுறைசார் பங்களிப்புக்கள் பற்றியும் பேசியுள்ளோம் எனவே இவருடைய ஆய்விலிருந்து எமது ஆய்வு இவ்வாறு வித்தியாசப்படுகிறது.

அலி இப்னு சீனாவின் அனைத்து மருத்துவத்துறைசார் பங்களிப்புக்களும் சமூகத்தின் மத்தியில் அறியப்படாமல் இருப்பதே இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற அதேவேளை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த அலி இப்னு சீனாவினுடைய மறைந்து போயிருக்கும் மருத்துவத்துறைசார் சேவைகளைக் கண்டறிவதோடு அச்சேவைகளை சமூகத்திற்கு எத்திவைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2. ஆய்வுநோக்கம்**

அலி இப்னு சீனாவின் மறைந்துபோயிருக்கும் மருத்துவத்துறைசார்ந்த சேவைகளைக் கண்டறிந்து ஆவணப்படுத்தல்.

**3. ஆய்வுமுறை**

பண்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகவுள்ளது. நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய ஆக்கங்கள் போன்ற தரவுகள் மீளாய்வுசெய்யப்பட்டு விபரிப்பு மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**4. கலந்துரையாடல்களும், பெறுபேறுகளும்**

**4.1. இளமை மற்றும் கல்விச்சூழல்**

இவரது தந்தை நன்கு கல்வி கற்றவராக இருந்தமையால் ஆரம்பக் கல்வியை தன் தந்தையிடமேகற்றார். இவர்தனது 13ஆம் வயதில் மருத்துவத்தில் தனது படிப்பைத் துவங்கி ஒரு புகழ்பெற்ற மருத்துவரானார். அவரது மருத்துவ நிபுணத்துவம் அவரை புகாராவின் சுல்தான் நூஹ் பின் மன்சூரின் கவனத்திற்குக் கொண்டுவந்தது. எனவே அவர் ஒரு தீவிர நோய்த்தொற்றுக்கு வெற்றிகரமாக சிகிச்சையளித்து அதற்கு வெகுமதியாக சுல்தானின் நூலகத்தையும் அதன் அரிய கையெழுத்துப் பிரதிகளையும் பயன்படுத்த தனக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று மட்டுமே கேட்டுக் கொண்டு தனது ஆராய்ச்சியைத் தொடங்கினார்(Mamura,1962). பல்வேறு சமயங்களில் அவர் அரசியல் நிர்வாகி, நீதிமன்ற மருத்துவர், சிப்பாய் மற்றும் அவ்வப்போது வெளியேற்றப்பட்ட கைதியாக பணியாற்றினார் (Ternovski,1969). மற்றும் 10 வயதில் அவர் குர்ஆனை மனனம் செய்ததோடு அவரது 16ஆம் வயதிற்கு முன்னர் இயற்பியல், கணிதம், தர்க்கம் மற்றும் மெட்டாபிசிக்ஸ் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டார். மேலும் 17ஆம் வயதில் மருத்துவதுறையில் கவனம் செலுத்திய இவர் தனது 18ஆம் வயதில் புகழ் பெற்ற மருத்துவராக விளங்கினார். அத்தோடு அவர் தனது 21ஆம் வயதில் முதல் புத்தகத்தை எழுதத் தொடங்கினார். அவற்றுள் புகழ் பெற்ற நூலான கானூன் (canon)உம் ஒன்றாகக் காணப்படுகின்றது. மேலும் அவர் அவரது சேவைகளில் புத்திசாலித்தனமாகவும், தீவிரமாகவும் இருந்துள்ளார். பின்னர் தந்தையின் உதவியால் ஒரு வணிகரிடமிருந்து இந்திய எண்கணிதத்தையும் இஸ்மாயீல் அல் ஜாஹித் என்ற அறிஞரிடம் ஹனபிசட்டங்களை (பிக்ஹ்) பயின்றதாகவும் அக் காலத்தில் வாழ்ந்த சில அறிஞர்களிடம் தர்க்கம், இறைமையியல் (mettophysyc)ஆகியவற்றை கற்றதாகவும் சில நெருக்கடியான சூழலில் உதவி பெற்றதை தவிரபெரும்பாலும் தன் சுய ஆற்றலால் பல்வேறு அறிவுகளை பெற்றதாகவும் தன் வாழ்க்கை குறிப்பில் குறிப்பிடுகிறார்(Bogolybov,1983) என சிலஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஒருமுறை புகாராவுக்கு வந்திருந்த நட்டாலி என்ற

தத்துவவியல் அறிஞரை தம் இல்லத்திற்கு அழைத்து வந்து தன் மகனுக்கு தத்துவவியலை கற்கவைத்தார்(Soheil M Afnan,1958).

**4.2. நூல்களும், மருத்துவகுறிப்புக்களும்**

அலி இப்னு சீனாஎழுத்தின் பெறுமதியை உணர்ந்து பல நூல்களை எழுதியுள்ளார். அந்தவகையில் இவரால் கிட்டத்தட்ட 450 நூற்கள் எழுதப்பட்டுள்ளன(Eiliebsepher,2018). இவ்வாறுஎழுதப்பட்டாலும் இன்று அவற்றில் கிடைக்கக்கூடிய நூல்களாக 240 நூல்கள் மாத்திரமே காணப்படுகின்றது. இவற்றுள் 150 நூற்கள் மெய்யியல் அல்லது தர்க்கவியல்சார்ந்த நூல்களாகக் காணப்படுகின்றது. இவற்றுள் முக்கியமான நூல்களாக,The book of healing - كتاب الشفاءஎன்று அரபியிலும் (நோயாற்றுதல்) அறிவியல் களஞ்சிய நூலாகவும் அதிக விடயங்கள் கூறப்பட்ட நூலாகவும் காணப்படுகிறது. இந் நூலின் முதல் பகுதியில் தர்க்கவியல், பௌதீகவியல், கணிதம், அதீதபௌதீகம் என்ற நான்கு பிரிவுகளும் இரண்டாம் பகுதியில் உளவியல், தாவரவியல், விலங்கியல் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பௌதீகவியல் பிரிவில் அண்டவியல், வளிமண்டலவியல் விண்வெளிநேரம், வெற்றிடம், இயக்கம் என்பன பற்றிய கோட்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன(Eiliebsepher,2018).

The canon of medicine - இந்நூல் 1025 இல் வெளியிடப்பட்டது. மருத்துவநெறி முறைகள் சார்ந்த நூலாகவும் காணப்படுகின்றது. இந்நூல் 1270 ஆம் ஆண்டுகளில் ஹிப்ரு மற்றும் லத்தீன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. அதேபோல் DOCTOR OSI GROONER மூலம் 1930 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலமொழியில் மொழிபெயர்க்கப்பட்டது(Temovski,1969). The canon of medicine மருத்துவநெறி முறைகள் என்ற நூல் 1978 ஆம் ஆண்டு மீண்டும் Newyorkஇல் அச்சிடப்பட்டது(Avicenna,2018). இந் நூல் "இதுவரை எழுதப்பட்ட மிகவும் பிரபலமான மருத்துவ பாடநூலாகவும் இது வேறு எந்த நூல்களை விடவும் நீண்ட காலத்திற்கு ஒரு மருத்துவ பைபிளாகவே இருந்த வேத நூலாகவும் காணப்படுகின்றது" (வில்லியம் ஒஸ்லர்,1884).

இப்னு சீனா எழுதிய மருத்துவ நியதி (கிதாப் அல்-கானுன் ∴பை அல்-திப்) (4வதுபுத்தகத்தின் ஒளிரும் திறப்பு). ஈரானில் 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்யப்பட்ட ஒரு அரிய முழுமையான திட்டமாகும். அவரது புத்தகம் The cananஅந்த நேரத்தில் பண்டைய மற்றும் முஸ்லீம் மூலங்களிலிருந்து கிடைத்த முழு மருத்துவ அறிவையும் தெளிவான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சுருக்கத்தில் ஆய்வு செய்தது. இது முதலில் அரபியில் எழுதப்பட்டது. பின்னர் பாரசீக,லத்தீன்,சீன, ஹீப்ரு, ஜேர்மன்,பிரஞ்சுமற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. மேலும் இது 12ஆம் நூற்றாண்டில் முதன்முதலில் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு ஐரோப்பிய மொழியின் நிலையான பாடநூலாக மாறியது(அவிசென்னா,1028). மருத்துவப் பள்ளிகள் மற்றும் முஸ்லீம் உலகில் 20ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து ஆலோசிக்கப்பட்டது. மருத்துவ நியதி ஐரோப்பாவிலும் இஸ்லாமிய உலகிலும் மருத்துவத்திற்கான தரங்களை அமைத்தது. புத்தகத்தின் பெரும்பகுதி

யூனானி (கிரேக்க) மருத்துவத்தின் அடிப்படையையும் உருவாக்கியது. இது இந்தியாவின் இஸ்லாமிய பல்கலைக்கழகங்களில் இன்றும் கற்பிக்கப்படும் பாரம்பரிய மருத்துவத்தின் ஒரு வடிவமாகும்(Wickens,1952). 10 நூற்றாண்டுகளுக்கு முன்னர் கேனான் விவரித்த மருத்துவக் கொள்கைகள் மருத்துவ வரலாற்றின் ஒரு பகுதியாக U.C.L.Aமற்றும் Yealபல்கலைக்கழகத்தில் இன்றும் கற்பிக்கப்படுகின்றது(Zahid,2020). 1000 ஆண்டுகளாக அலி இப்னு வரலாற்றில் மிகப் பெரிய சிந்தனையாளராகவும் மற்றும் மருத்துவ அறிஞர்களில் ஒருவராகவும் தனது புகழைத் தக்கவைத்துக் கொண்டார்(Baratov,1980). அவரது மிக முக்கியமான மருத்துவப் பணிகளுள் கானுன் (கேனான்) உம் ஒன்றாகும். அவர் ஒரு மருத்துவமுறையையும் உருவாக்கினார். இன்றுநாம் அதை “முழுமையானது” என்று அழைக்கிறோம்(Ziyadala, 2018). இதில் மனநோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில் உடல் மற்றும் உளவியல் காரணிகள்,மருந்துகள் மற்றும் உணவுஆகியவை இணைக்கப்பட்டன. இவரதுபடைப்புகளுக்கு இத்தகையபுகழ்கள் இருந்தபோதிலும்,அவிசென்னா இன்று மேற்குநாடுகளில் அரிதாகவே நினைவு கூறப்படுப்படுகிறார். மேலும் மருத்துவத்திற்கான அவரது அடிப்படைப் பங்களிப்புக்கள் பெரும்பாலும் அங்கீகரிக்கப்படவில்லை. அலி இப்னு சீனா எழுதிய மருத்துவ நியதி (கானுன்: மருத்துவ விதி) மருத்துவ வரலாற்றில் மிகவும் பிரபலமான புத்தகங்களில் ஒன்றாகும். கேனனின் அரபு உரை 12ஆம் நூற்றாண்டில் சீனாவில் மட்டும் 679அரபு உரைகள் ஐரோப்பிய மொழியில் இருந்து லத்தீன் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது(Nasr,1991). இந்தத் தலை சிறந்த படைப்பு அறிஞர்களுக்கு ஒரு அத்தியாவசிய மருத்துவக் கலைக் களஞ்சியமாக பணியாற்றியுள்ளது. அவர் தனது சொந்த அனுபவங்களை ஒன்றிணைத்துத் தனது கேனன் எழுதுவதற்காக தனது முன்னோடியான அரிஸ்டாட்டில் ஹிப்போகிரட்டிஸ் ஆகியோரின் போதனைகளைத் தொகுத்தார்(Tuzla,2014). எவ்வாறாயினும் நவீன மருத்துவத்துடன் ஒப்பிடுகையில் பண்டைய மருத்துவகொள்கைகள் முற்றிலும் வேறுபட்டவை என்பதை ஒருவர் உணர வேண்டும். அவற்றின் நிர்வாகங்களைப் பற்றி விவாதித்த நோய்களின் விளக்கம் இன்று வேறுபட்டிருக்கலாம். அவரது மூன்றாவது புத்தகத்தின் 11-வது பிரிவுமுக்கியமாக பல்வேறு வகையான இதயநோய்கள் அவற்றின் விளைவுகள் மற்றும் சிகிச்சைகள் பற்றி விளக்குகின்றது(Shamshi basha,1987).

5 பெரும் பாகங்களைக் கொண்ட கானூனின் முதற் பாகத்தில் வரைவிலக்கணங்களும், மனிதஉடல், ஆன்மா, நோய்கள் போன்ற உளவியல் பற்றியும். இரண்டாம் பாகத்தில் அகரவரிசையில் நோய்களுக்கான அறிகுறிகளும். மூன்றாம் பாகத்தில் கால் முதல் தலைவரையுள்ள உறுப்புகளைப் பாதிக்கும் நோய்கள் பற்றிய விளக்கங்களும், பொது நோய் பற்றிய குறிப்புக்களும். நான்காம் பகுதியில் காய்ச்சல், வீக்கம், உடைவு, அறுவைசிகிச்சை, முறிவு, உணவுநஞ்சாதல், விசர்நாய் கடி, சருமநோய் பற்றியவிளக்கங்களும். ஐந்தாம் பகுதியில் கலவை முறை மருந்துகள், சிகிச்சைமுறைகள் போன்றவைபற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 5 பெரும் பாகங்களைக் கொண்ட கானூனில் இப்னு சீனா மற்றவற்றுடன் மனிதனின் உளவியல் எந்திரத்தின் அமைப்பு மற்றும் மூளையுடன் உளவியல் செயல்பாடுகளின் தொடர்பு பற்றி விவாதிக்கிறது. மருத்துவத்திற்கு உளவியல் மிகவும் முக்கியமானது என்று அவர் கருதினார். எனவே அவர் தனது உளவியல் படைப்புக்களில்

மனித ஆன்மாவின் சாரம்சம், நனவு, புத்தி மற்றும் பிற உளவியல் செயல்பாடுகளை மிக விரிவாக விவாதிக்கிறார். அவர் ஒருமனிதனை முழவதுமாக அவதானிக்கிறார். அவரது இருப்புக்கான அனைத்து அம்சங்களையும் கருத்தில்கொண்டு ஆன்மீக அறிவு மற்றும் ஆன்மீக பரிபுரணம்,மதவாதம் மற்றும் உள்அமைதி மற்றும் நல்வாழ்வை அடைவதற்கான முறைகள் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தினார். இவ்வாறே உளவியலில் பங்காற்றியுள்ளார்(Ahamed pajevic,2021). கேலனின் வாரிசாகக் கருதப்படும் இந் நூலில் 760 வகையான மருந்துகள் தொடர்பான விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. 17 ஆம் நூற்றாண்டில் அரபு உலகிலும் ஐரோப்பாவின் பல்கலைக்கழகங்களிலும் மருத்துவம் குறித்த நிலையான பாடப்புத்தகமாக இது பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது 1025 இல் நிறைவடைந்தது(Avicenna, 1025). இது தவிர இப்னுசீனா அர்ஜூஸா பித்திப்,அத்வியதுல் காலிபா முதலிய மருத்துவ நூல்களையும் எழுதியுள்ளார். தொற்று நோய் பற்றி உலகிற்கு முதலில் அறிமுகம் செய்த இவர் சிலநோய்களின் பரம்பலுக்கு மண்ணும் நீரும் காரணமாகின்றன என்றும் நிறுவினார். இவரின் புத்தகங்களில் குறிப்பாகThe book of Healing, The canon of medicineஆகியன 16 ஆம் நூற்றாண்டு வரை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவரின் பங்களிப்புகள் என்றவகையில் உடல் இயக்கவியல் ஆராய்ச்சிகள் முறைப்படியான பரிசோதனைகளையும் அளவீடுகளையும் முதன்முறையாக பயன்படுத்தியவர் இவராகக் காணப்படுகின்றார். தொற்று நோய்களை கண்டறிந்தும் அவை தொற்றும் முறைகளை வகைப்படுத்தியும் அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளையும் கண்டறிந்தார். தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளில் பிரதானமாக தனிமைப்படுத்தல் முறைமை முதன் முதலில் கண்டறிந்ததும் அதனை செயற்படுத்தியதும் இப்னு சீனாவாகக் காணப்படுகின்றார(James,2012'). தனிமைப்படுத்தல் என்பது நோயுற்றவர்களைத் தனிமைப்படுத்தல் என்றும் நோயுற்றவர்கள் மூலம் மற்றவர்களுக்கு அந்த நோய் பரவாமல் பாதுகாக்கும் முகமாக ஏனையவர்களைத் தனிமைப்படுத்தல் என்ற இரு கருத்துக்கள் காணப்படுகின்றது. இதனால்தான் அன்றைய காலத்தில் தொற்றுநோய் பரவியதன் காரணமாகமக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக இந்த தனிமைப்படுத்தலைப் பிரயோகித்துள்ளார். தனிமைப்படுத்தல் என்பதற்கு இத்தாலியில் Quarantineஎன்று சொல்லப்பட்டாலும் இன்றைய காலத்தில் ஆங்கிலமொழியிலும் Quarantineஎன்றே பயன்படுத்தப்படுகிறது. இது ஆரம்பகாலத்தில் அல்அர்பேனியா என்ற அரபு வசனத்தின் ஊடாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது(Sarah,2016). இந்த அர்பேனியா என்பதன் விளக்கம் 40 ஆகும். இந்தசொல் பிற்காலத்தில் ஐரோப்பியாவிற்கும் பின் இத்தாலிக்கும் பின்பு 21ம் நூற்றாண்டு முழு உலகிற்கும் பரப்பப்பட்டுள்ளது. முதன் முதலாக தொற்றுநோய் மனிதனிலிருந்து மனிதனிற்குக் கண்ணுக்குப் புலப்படாத அதாவது வைரஸினால் (நுண்ணுயிர்களினால்)பரவுகின்றது என கண்டுபிடித்தவர் அலி இப்னு சீனா ஆவார். அத்துடன் நோய்கள் ஏற்படுத்துவதற்குப் பிரதான காரணமாக கண்ணுக்குப் புலப்படாத இந்த ஜெம் அதாவது நுண்ணுயிர்கள் தான் காரணம் என்றும் இவர் கண்டுபிடித்தார். இதனை 1000 வருடங்களுக்குப் பின்புதான் லூயிபாஸ்டர் கண்டுபிடித்தார்(Craig,2020).

**இவருடைய இன்னும் சில நூல்கள் வருமாறு**

மருததுவத்தின் நியதி, குறிப்புகள் மற்றும் அறிவுரைகள்,இயற்பியல் மற்றும் மெட்டாபிசிக்ஸ்,குணப்படுத்தும் புத்தகம்,குணப்படுத்துவதற்கான மெட்டாபிசிக்ஸ்,இப்னு சீனாவின் வாழ்க்கை,மருத்துவ ஹிப்ரு மொழிபெயர்ப்பில் அவிசென்னா,இறையியல் பற்றிய அவிசென்னா,ஆன்மா முதலிய ஒரு தொகுப்பாளர்,அவிசென்னாவின் உளவியல்,அவிசென்னாவின் மருத்துவம், அலல்-தவ்லாவுக்கான அறிவு புத்தகம்,இப்னு சீனா மற்றும் ஆன்மீகவாதம்,அவிசென்னாவின் மருத்துவ நியதி பற்றிய கட்டுரை,துடிப்பு விஞ்ஞானம் தி கேனான் ஆப் மெடிசின் (அல் கானுான் பி திப்),அவிசென்னாவின் விடுதலை,தர்க்கம்,அரிஸ்ட்டாட்டில் கவிதைகள் பற்றிய அவிசென்னாவின் வர்ணனை போன்றவைகளாகும். மேலும் அலி இப்னு சீனாவின் மருத்துவத்துறை சார்ந்த முக்கியமான பங்களிப்புகளில் காசநோயின் தொற்றுதன்மையை கண்டறிந்ததோடு நீர் மற்றும் மண்ணால் நோய்கள் பரவுதல்,மற்றும் உளவியலுக்கும் ஆரோக்கியத்திற்கும் இடையிலானதொடர்பு,போன்ற மருந்தியல் முறைகளை பற்றி விபரிக்கிறது. மேலும் இப்னு சீனா இதயமருந்துகள் பற்றிய ஒரு நூலை எழுதினார்,''அல்-அத்வியத் அல்-கல்பியா'', இது ஆங்கிலத்திற்கு''இருதயமருந்துகள் மற்றும் அரபு இருதயசிகிச்சையில் கட்டுரைகள் பற்றிய அவிசென்னாவின் பாதை''என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மூளைக்காய்ச்சலை முதலில் விவரித்தவர் இவரே. உடற்கூறியல்,பெண்ணோயியல் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்காக பங்களிப்புகளையும் செய்துள்ளார். மேலும் மனநல மருத்துவராகவும் அலி இப்னு சீனா தனது நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க பெரும்பாலும் உளவியல் முறைகளைப் பயன்படுத்தினார் (Nazar,1980). உதாரணமாக பெர்சியாவின் ஊட்டச்சத்து குறைபாடுள்ள இளவரசருக்கு ஏற்பட்ட மனச்சோர்வையும் தன் மனநலமருத்துவத்தின் மூலம் முழுமையாக குணப்படுத்தியுள்ளார்.

**The canon of Avicenna;**இருதயநோய் நிபுனராக,அவிசென்னாவின் துடிப்பு பற்றிய விளக்கங்களும் காணப்படுகிறது. துடிப்பு எடுப்பது அனைத்து மருத்துவ பரிசோதனைகளிலும் எளிமையான,பழமையானமற்றும் மிகவும் தகவலறிந்தஒன்றாகும். பெரும்பாலான மருத்துவ மரபுகளில் இது ஒருமுக்கிய கண்டறியும் முறையாகும். குறிப்பாக பண்டைய எகிப்திய மருத்துவம்,சீன பாரம்பரிய மருத்துவம்,கிரேக்க இஸ்லாமிய மற்றும் ஆயுர்வேத மருத்துவம் என்பனவாகும். மருத்துவ வரலாறு முழுவதும்,துடிப்பு இருதய செயலிழப்பை மதிப்பிடுவதில் ஒரு முக்கியமான அளவுருவாக இருந்தது. மேலும் அலி இப்னு சீனா துடிப்பின் தொட்டுணரக்கூடிய பரிசோதனையில் ஒருபோதும் தோல்வியடையாத மருத்துவராக காணப்பட்டார்(wario,2021).

மேலும் இவர் துடிப்பு மற்றும் அன்பின் தன்மை பற்றி முதலில் இசைதாளங்களுடன் ஒப்பிட்டு அவதானித்துள்ளார். தற்போதைய நடைமுறையில் உள்ள மணிக்கட்டை பயன்படுத்தி துடிப்பை ஆராயும் நவீன அணுகு முறையின் முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார். துடிப்பின் ஒவ்வொரு துடிப்பும் இரண்டு இயக்கங்களையும் இரண்டு இடைநிறுத்தங்களையும்

கொண்டுள்ளது. உதாரணமாக : விரிவாக்க இடைநிறுத்தம்,சுருக்க இடைநிறுத்தம் ஆகும்.மேலும் அலி இப்னுசீனா இருதயவியல் துறைக்கும் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளார். கேலனைப் போலவே,அவர் தனதுபடைப்பின் பெரும் பகுதியை துடிப்பு ஆய்வுக்காக அர்ப்பணித்தார். மற்றும் ஸ்பைக்மோலஜி துறையில் அவர் செய்த பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. அலி இப்னு சீனாவின துடிப்பு விஷயத்தை விரிவாக உள்ளடக்கி துடிப்பு எடுக்கும் நுட்பத்தை விவரிக்கிறது. மற்றும் சுற்றுச்சூழல்,நோயாளியின் உடல் நிலை மற்றும் கோபம், இன்பம்,மகிழ்ச்சி,கவலைமற்றும் பயம் போன்ற உணர்ச்சி நிலைகள் துடிப்புகளில் பல்வேறு நிலைகளின் விளைவுகளை பதிவு செய்கிறது(Abdulla,1980). இதயநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் ஆரோக்கியமான உணவு குறித்தும் அவர் குறிப்பாக இருந்தார். அளவு மற்றும் தரத்தின் மிதமான சரியான உணவு மூலம் நமது ஆரோக்கியத்தை பாதுகாப்பது என்று அவர் கூறுகிறார். ஒவ்வொரு செரிமானத்தில் இருந்து மீதமுள்ள அளவு உடலில் எஞ்சியிருக்கும். இந்த சுழற்சியை மீண்டும் செய்வதன் மூலம் பலஅம்சங்களில் இருந்து உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கழிவுகள் குவிகின்றன(Black,1993). கி.பி 1520இல் இருதய மருந்துகளின் புத்தகத்தில் இதயத்தின் உடற்கூறியல் மற்றும் உடலியல், இரத்தஓட்டம் பற்றிய பாரம்பரிய அறிக்கையை அவர் முக்கியமாக எழுத்துக்களை அடிப்படையாக கொண்டு முன்வைக்கிறார் (Sidfar,1981).

இப்னு சீனா கேலனை பின்பற்றுபவராக இருந்திருக்கலாம்,ஆனால் அவர் பலமுன்னோடி பங்களிப்புகளை செய்தார். அவர் வரலாற்றில் மிகப் பெரிய சிந்தனையாளர்கள் மற்றும் மருத்துவ அறிஞர்கள் என்று வரலாற்றாசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அவர் தனது சகாப்தத்தின் “மருத்துவர்களின் இளவரசர்”என்று அழைக்கப்பட்ட இப்னு சீனா கி.பி.1037 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது 56வது வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்(Sivakadadcham). இது ரமழான் மாதமாகவும் காணப்பட்டது. இவருடைய அடக்கஸ்தலம் இன்று உள்ள ஈரானின் ஹமதான் என்ற இடத்தில் காணப்படுகின்றது.

## 5. முடிவுரை

மருத்துவத்துறைசார் பங்களிப்புகளைப் பற்றி இவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டாலும் அவை உலகிற்கு வெளிக்கொண்டுவரப்படாமல் மூடிமறைக்கப்பட்டுள்ளது. இவரது மருத்துவத்துறை சார்ந்த சேவைகள் மறைந்துபோகாமல் அதனை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினரும் இவரைப்போன்று மருத்துவத்துறையில் சேவையாற்றக் கூடியவர்களாக மாறுவதற்கு இவரது பங்களிப்புக்களை ஆவணப்படுத்துவதையே முழு நோக்காகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்பக் காலத்திலும் சரி தற்காலத்திலும் சரி மாற்று மதத்தவர்களுடைய சேவைகள் செவ்வனே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம் சமூகத்தின் எந்தவொரு விடயங்களும் சரியான முறையில் ஆவணப்படுத்தப்படாமல் இருக்கின்றது. அந்தவகையில் மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படக்கூடிய இப்னு சீனாவினுடைய நூல்கள் இன்றும் கூட சமூகத்தால் அறியப்படாமல் இருப்பதோடு,அவரது நூல்கள் சுமந்து வந்துள்ள மருத்துவக் குறிப்புக்களும் இன்று அரிதாகவே

பின்பற்றப்படுகின்றது. எனவே எமது எதிர்கால சந்ததியினராகிய நாம் அலி இப்னு சீனாவின் மருத்துவக்குறிப்புக்கள் பற்றியும் அவர் மருத்துவத்திற்கு ஆற்றிய சேவைகள் பற்றியும் அறிந்து இனிவரும் காலங்களில் சமூகத்திற்கு சேவையாற்றிய பல்துறைசார் சேவகர்களையும் அவர்களது சேவைகளையும் மதித்து அனைவரது வாழ்விலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே அலி இப்னு சீனாவின் வாழ்வில் இருந்து தெளிவான அம்சங்களைத் தொகுத்து இவ் ஆய்வை மேற்கொண்டுள்ளோம்.

**உசாத்துணைகள்**

Abdulla-Zade,H.F,.(1980).*A list of Ibn Sina's work in the natural sciences* . Department Responsible for publication:Russia.

Afnan,S.M,.(1958).Avicenna:His Life &work.The other perssSdn. Bhd:London.

Pajevic,A.Pajevic,I.Hasanovic,M.Jakovljevic,M.(2021).*Medicine and phychology of ibnsina-A unique scientific and religious approach.* Researchgate.http://www.researchgate.net/ publication/

Arularasan.G.,(2020). *Avicenna.BBC News*. Retrived from https://ta.m.wikipedia.org/wiki/

Avicenna,(1028) *is the Latin form of Ibn Sina*.FB page safetrust. Retrived from https://m.facebook.com/permalink.php?story

Avicenna,(1025).*Canon of Medicine*.Kazi publication.

Bag,A.K.,.(1986).*ibn Sina and Indian science.*Researchindia Publication: India.

Baratov,M.B,.(1980)*The great thinker Abu Ali ibn Sina*.Moscowpublication:Russia.

Bogolyubov,O.M.andGukovich,V.O,.(1983).*On the thousandth anniversary of the birth of Ibn-Sina (Avicenna) :*Loyal publication:Ukrain.

Eiliebsepher,T,.(2018).*The book of Healing*.Destiny image publication.

Faqeehudheen,M,. (2017).*Muslim who underwent surgery*.Srilankamuslims.Retrived from https://srilankamuslims.l

Ghorbani,A.andHamadanizadeh,J,.(1980).*A brief biography of Abu 'Ali Sina (Ibn Sina),Bul*l.It publishes articles Publication: Iran, Math.

Gohlman,W.E,.(1974).*The Life of Ibn sina*.state university of New York.

Goodman,L.E.(1992).*Avicenna Updated Edition*.Cornel university press; New York.

Ismail.(2012).*விஞ்சான வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்களிப்பு.*Retrived from http://www.jaffnamuslim.com.

Moosavi,j.(2009).*The place of Avicenna in the History of Medicine*.Research Gate.Retrived from https://www.researchgate.net/publication/


ISBN 978-624-5736-14-0

Mamura,M.E,.(1962). *Some aspects of Avicenna's theory of God's knowledge of particulars.*Islamic republic Publication of iran:Iran.

Nazar,O.W and Abdulla,H,.(1980)-*Avicenna in medical habrewtranslation*.Department Responsible for publication:Russia

Rizvi,S.H,.*Avicenna (Ibn Sina*) (c. 980—1037).iep. Retrived from http://iep.utm.edu/avicenna/

Said,H.M.(1986).*Ibn Sina as a scientist.*Researchindia publication: India.

Sarah.(2016).*Medicine of* யுளைஉ_நடுெ.http://Wikipedia.com.

Sivakadadcham, B,. (2008) *ThamilarMaruthuvamAnrumInrum*, Vanavil Publishers Trincomalee.Retrived from noolaham.net.

Sivalingam,c.(2014).*Avicenna's life*.http://youtube.be.

Ternovskii,V.N,.(1969)*Ibn Sina (Avicenna) 980-1037*. 'Nauka':Moscow

Wario - man. (2021).*Avicenna.BBC*. Retrived from http://bbc.Org./Avicenna

Wickens,G.W,.(1952) *Avicenna: Scientist and Philosopher*. Public Relations Department publication: Rasia

Ziyadaia.(2018). *Ali ibn Sina>the father of modern medicine*.lanka health Tamil.Retrived from https://www.lankahealthtamil.com/ibn-sina-

(2019).*Muslims Contribution to modern medical science* Retrived from https://m.facebook.com.

(2010)*.இஸ்லாமிய மருத்துவ மேதை அலிஇப்னுசீனா.*Retrived from http://eastadirai.blogspot.com.